ந.க.பி2/20129/2018

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நீலகிரி மாவட்டம்.
உதகமண்டலம்
நாள்:25.09.2018.

## நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவிக்கை

மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் நீதிபேரணை எண்.26029/2015-ல் கடந்த 17.09.2018-ல் வழங்கிய இடைக்கால தீர்ப்புரையின் நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் "நீலகிரி வனவிலங்கு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்கம்" **(Nilgiris Wild Life and Environment Association)**, அதன் பொறுப்பாளர்கள் மற்றும் அதன் உறுப்பினர்கள் ஆகியோரது செயல்பாடுகள், நடவடிக்கைகள் மற்றும் நடத்தை ஆகியவற்றின் மீது ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அவற்றை புகாராக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சமர்ப்பிக்க உத்தரவிட்டுள்ளது. எனவே, அதன் அடிப்படையில் பின்வருமாறு அறிவிக்கை செய்யப்படுகிறது.

நீலகிரி மாவட்டத்தின் இயற்கை வளத்தையும் அதில் வசிக்கும் வனவிலங்குகளை பாதுகாக்கும் நோக்கத்திலும் கடந்த 1877ஆம் ஆண்டு **"நீலகிரி வனவிலங்கு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்கம்" (Nilgiris Wild Life and Environment Association)** தொடங்கப்பட்டு நாளது வரை செயல்பட்டு வருகிறது. இந்த சங்கமானது நீலகிரி மாவட்டத்தின் இயற்கை வளம் மற்றும் வனவிலங்குகளை பாதுகாத்தல், மக்கள் மத்தியில் இயற்கை வளம் மற்றும் வனவிலங்குகளை பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகளை செய்து வருகிறது. இந்த சங்கத்திற்கு சொந்தமாக மூக்கூர்த்தி என்ற இடத்தில் மீன் குடில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சங்கத்தில் தற்போது வரை 951 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

(த.பி.பா.)

இச்சங்கம் தற்போது எந்த நோக்கங்களுக்காக தோற்றுவிக்கப்பட்டதோ அவற்றிலிருந்து விலகி செயலாற்றிவருவதாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை எண்.26029/2015-ல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் கடந்த 17.09.2018-ல் வழங்கிய இடைக்கால தீர்ப்புரையின் நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் "நீலகிரி வனவிலங்கு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்கம்" **(Nilgiris Wild Life and Environment Association)** அதன் பொறுப்பாளர்கள் மற்றும் அதன் உறுப்பினர்கள் ஆகியோரது செயல்பாடுகள், நடவடிக்கைகள் மற்றும் நடத்தை ஆகியவற்றின் மீது ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அவற்றை புகாராக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அச்சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் சமர்ப்பிக்கலாம் என தெரிவித்து சுற்றறிக்கை அனுப்ப உத்தரவிட்டுள்ளது. எனவே, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புரையின்படி நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் "நீலகிரி வனவிலங்கு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்கம்" **(Nilgiris Wild Life and Environment Association)** அதன் பொறுப்பாளர்கள் மற்றும் அதன் உறுப்பினர்கள் ஆகியோரது செயல்பாடுகள், நடவடிக்கைகள் மற்றும் நடத்தை ஆகியவற்றின் மீது ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அவற்றை சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் மனுவாக எழுதி நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் நேரடியாகவோ, தபால்மூலமாகவோ 26.09.2018 தேதியிலிருந்து 01.10.2018 தேதி வரை சமர்ப்பிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/ஜெ.இன்னசென்ட திவ்யா
மாவட்ட ஆட்சித் தலைவர்,
நீலகிரி மாவட்டம்.

/உ.ந.உ.ப./

மாவட்ட ஆட்சியருக்காக,
நீலகிரி மாவட்டம்.